# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 44 — 1973 ජනවාරි 26 වැනි සිකුරාදා — 1973.01.26

44 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 85 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சிட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 88 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சிறைச்சாலைப் பகுதி

*மகாறைச் சிறைச்சாலையில் செய்யப்பட்ட கரிபோடும் சாக்குகளும் பழுதடைந்த வெற்றுச் சாக்குகளுக்கும் விண்ணப்பம்*

1. மேற்குறிப்பிட்ட பொருட்களை வாங்குவதற்கு விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 20 ம் திகதி காலை 10:30 மணிவரை, சிறைச்சாலை அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. தொகை.—(1) கயிற்றால் செய்யப்பட்ட கரிபோடும் சாக்கு 2490.

(2) பழுதடைந்த வெற்றுச் சாக்கு 1000.

3. விண்ணப்பிப்போர் முற்பணமாக ரூபா 25 இக் கந்தோரில் கட்டி; அந்த ரசீத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். பொருட்கள் விற்பனை செய்தபின் 7 நாட்களுக்குள் அவைகள் எடுக்கப்படாவிடின், அப்பொருட்களும், முதலும் அரசாங்கத்துக்கு உரியது.

விண்ணப்பகாரர் தங்கள் விலாசத்தை விண்ணப்பம் அனுப்பும் உறையில் குறிப்பிட வேண்டும்.

கட்டிய முற்பணம் விற்பனையின்பின் பொருட்கள் எடுக்கும் பொழுது திருப்பிக்கொடுக்கப்படும்.

4. விண்ணப்பகாரர் வெவ்வேறாக ஒவ்வொன்றிற்கும் விலை குறிப்பிடவேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அனுப்பும் உறையில் மேலே இடது பக்கத்தில் கரிச்சாக்கு, பழுதடைந்த வெற்றுச்சாக்கு விண்ணப்பம் எனக்குறிப்பிட வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

5. சிறைச்சாலை அதிகாரி 1973 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 02 ம் திகதி காலை 10.35 மணிக்கு விண்ணப்பங்களைப் பார்வையிடுவார். அந்நேரம் விண்ணப்பகாரர் விண்ணப்பங்களைப் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

6. இதைப்பற்றிய வேறு விபரங்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் அறிந்துகொள்ளலாம்.

அதிகாரி, மகாரைச் சிறைச்சாலை,
தொலை பேசி இலக்கம் 257—281.

1-851—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆு திசெம்பர் மீ 15 ந் உ.

### சிறு கைத்தொழில் இலாகா

குருணாகல தரம்பிரிக்கும் நிலையத்தில் கிணறு கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள், தலைவர் கேள்விப்பத்திர சபை, சிறு கைத் தொழில் இலாகா, அவர்களால் 1973.02.20 திகதி காலை 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்க இலாகாவில் கட்டட வேலைக்கென ரூபா 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்ய விரும்புவோர் ரூபா 25 ஐ வைப்புப் பணமாக இந்த இலாகாவிலாவது அல்லது கொழும்பு தவிர்ந்த வேறெந்த கச்சேரியிலாவது செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.02.19 ம் திகதி பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழில் இலாகா.

தொடர் இல. 3/1—(1/38)
சிறு கைத்தொழில் இலாகா,
ஹெமாஸ் கட்டடம்,
கொழும்பு 1, 1973.1.10/15.

1-958—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### பிராந்திய பொறியியல் அமைப்பு—மத்திய பிரதேசம்

நீர்ப்பாசன மின்சக்தி பெருவீதிகள் அமைப்பின் கீழ் உள்ள பிராந்திய பொறியியல் பிரிவின் குண்டசாலையில் உள்ள மத்திய பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் இலங்கையரிடமும் இலங்கை யின் கொம்பனிகளிடமிருந்தும் 1973 ம் வருடத்தில் பொருள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் யந்திர சாதனங்கள் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்ட இடங்களில் வாடகைக் கணக்கு நியமிப்பதற்காக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) மத்திய பிரதேசம் முழுவதும் (கேள்விப்பத்திரகாரர் விரும்பினால்)

(ஆ) மினிப்பை, குண்டசாலை, கண்டி, கடுகண்ணாவை, கலகெதற, மாத்தளை, லக்கல, தம்புல்ல, கம்பளை, நோர்வூட், கொத்மலை, நுவரஎலிய, வலபனை, றத்தோட்டை, கங்குராங்கத்தை ஆகிய பகுதிகள்.

கேள்விப்பத்திரம் 26.02.1973 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு உடனடியாக திறக்கப்படும். கேள்விப்பத் திரங்கள் கொடுப்பதற்கான கடைசித் திகதி 25.02.1973.

மேலதிக விபரங்கள் குண்டசாலையில் உள்ள மத்திய பகுதி வேலை அதிபரின் அலுவலகத்தில் 25.02.1973 வரை பெறமுடியும். ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் ரூபா 25 அறவிடப்படும்.

சீ. டபிள்யு. ஈ. ரேசா,
வேலை அதிபர், மத்திய பிரதேசம்,
குண்டசாலை.

1-844/1—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### பிராந்திய பொறியியல் அமைப்பு—மத்திய பிரதேசம்

நீர்ப்பாசன மின்சக்தி பெருவீதிகள் அமைப்பின் கீழ் உள்ள பிராந்திய பொறியியல் பிரிவின் குண்டசாலையில் உள்ள மத்திய பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ரூபா 25,000 ற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள், ஐக்கிய நாணய சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியவையிடமிருந்து பொருட்களை ஏற்றிச்செல்வதற்கான கேள் விப்பத்திரங்கள் 26.02.1973 ம் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற் றுக்கொள்ளப்படும். இது 1973 ஆம் நிதிவருடத்தில் கீழ்கண்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் பகுதிகளில் பொருட்களை ஏற் றிச்செல்வதற்கானவை.

(1) நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம்—மாத்தளை.

(2) நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலயம்—றத் தோட்டை.

2. விண்ணப்பிப்போர் குறைந்தது இரண்டு லொறிகளாகுதல் தங்கள் பெயரில் வைத்திருக்கவேண்டும். இதற்கு அத்தாட்சியாக பதிவுப்புத்தகத்தையும் 1973 ம் ஆண்டிற்கான வருமானப் பத்தி ரத்தையும் காண்பிக்க வேண்டும்.

ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட பகுதிகளுக்கு விண்ணப்பஞ் செய்யலாம். அப்படிச் செய்யும்பொழுது ஒவ்வொரு பகுதிக்கும் இரண்டு லொறிகள் வீதம் இருப்பதாக அத்தாட்சி பண்ணவேண்டும்.

3. வேலை அதிபர் குண்டசாலை அலுவலகத்தில் பெறும் கேள்விப் பத்திரங்களை இரட்டைப் பிரதியில் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். இக் கேள்விப்பத்திரங்களை 25.02.1973 திகதிவரையுள்ள வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும்போது ஒப்பந்தகாரர் தமது பதிவுப்புத்தகத்தையும் தற்போது நிறைவேற்றும் வேலை களையும் அதனால் அடைந்துள்ள தேர்ச்சி பற்றிய சான்றிதழை யும் சமர்ப்பித்தல் வேண்டும். வைப்புப்பணமாக ரூபா 25 ஐ ஏதா வது ஒரு பிராந்திய காரியாலயத்தில் அல்லது கச்சேரியில் கட்டி அதன் பற்றுச்சீட்டைக் காட்டியே கேள்விப்பத்திரங்கள் பெறமுடியும். மேலதிக விபரங்களை இக்காரியாலயத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. டபிள்யு. ஈ. ரேசா,
வேலை அதிபரும், கேள்விச்
சபைத் தலைவரும், குண்டசாலை.

1-844/2—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களம்

#### ஜெனரேட்டர் செட் விற்பனை

மருதானையிலுள்ள அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத் துப் பண்டசாலையில் இருக்கும் ஜெனரேட்டர் செட்டை விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் 1973.02.22 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை கொழும்பு 1, அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகம், 5 வது மாடி, பிரதான தந் தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவ லகம், கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு 1, கோட்டை, லோட்டஸ் ரோட், அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகம், 5 வது மாடி, பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியி யலாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங் களின், இணைப்படியில் கேள்விப்பத்திரத்தை தயாரித்தல் வேண் டும். பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறி யியலாளரிடமிருந்து சகல விவரங்களையும் அறிந்து கொள்ள லாம். மருதானையிலுள்ள அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்து பண்டகசாலைப் பொறியியலாளருடன் ஆலோ சித்து ஜெனரேட்டர் செட்டை பரிசோதிக்கலாம்.

அஞ்சல் அலுவலகங்களின் அதிபர்களிடமிருந்து அல்லது கொழும்பு 1, ம. த. அ. தந்திக் காசாளரிடமிருந்து கேள்விப்பத் திரக் கட்டுப்பணமாக ரூபா 50 கட்டியதென்று பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரகாரர்களுக்கு பிர தான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகம் கேள்விப்பத்திர சாதனங்களை 1973.02.19 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கும்.

எச். டி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்கு
வரத்துப் பொறியியலாளர்.

அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்கு
வரத்துச் தலைமை அலுவலகம்.
லோட்டஸ் ரோட்,
அ. பெ. இல. 503, கொழும்பு-1.

1-947—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

### தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

பாவிக்கப்பட்ட அலுவலக பொருட்கள் கொள்வனவுக்கான கேள்விகள்

கொழும்பு 7, அல்பேட் கிறசன்ற், எண் 16/7 இலுள்ள தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களக் கிளை அலுவலக வள்விலிருந்து பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்வதற்கான கேள்விகள் 1973 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ம் திகதி பி. ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

| விபரம் | இலக்கம் |
|---|---|
| (1) ஒட்னர் கணிப்புப் பொறி (கையால் இயக்குவது) ... | 107-602069 |
| (2) மொன்றோ கூட்டல் பொறி (கையால் இயக்குவது) ... | 364499 |
| (3) அண்டர்வூட் சன்ஸ் ருண்ட் கணிப்புப் பொறி ... | 482431 |
| (4) அண்டர்வூட் சன்ஸ் ருண்ட் கணிப்புப் பொறி ... | 482432 |
| (5) அண்டர்வூட் சன்ஸ் ருண்ட் கணிப்புப் பொறி ... | 482437 |
| (6) அண்டர்வூட் சன்ஸ் ருண்ட் கணிப்புப் பொறி ... | 482426 |
| (7) அண்டர்வூட் சன்ஸ் ருண்ட் கணிப்புப் பொறி ... | 550580 |
| (8) அடோ எக்ஸ் கூட்டல் பொறி (கையால் இயக்குவது) ... | 37900 |
| (9) அடோ எக்ஸ் கூட்டல் பொறி (மின் இயக்கம்) ... | 88233 |
| (10) ஒளிவெற்றி டீவுசுமா கணிப்புப் பொறி (மின் இயக்கம்) ... | 841223 |
| (11) ஒளிவெற்றி டீவுசுமா கணிப்புப் பொறி (மின் இயக்கம்) ... | 841227 |
| (12) றெமின்ரான் ருண்ட் பிறின்ரிங் கணிப்புப் பொறி ... | 96–683704 |
| (13) றெமின்ரான் ருண்ட் பிறின்ரிங் கணிப்புப் பொறி ... | 98–1304088 |
| (14) தட்டச்சு இம்பீரியல் ஆங்கிலம்... | 347908 |
| (15) தட்டச்சு இம்பீரியல் ஆங்கிலம்... | 117610 (எப். 2120) |
| (16) மின் இயக்க மோட்டர் (குதிரை வேகம்—0.25) ... | 18 |
| (17) பழைய பத்திரிகைகள் ... | 3 அந்தர் |

வழமையான அலுவலக நேரங்களில் கொழும்பு 7, அல்பேட் கிறசென்ற், எண் 16/7 இலுள்ள தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களக் கிளை அலுவலகத்தில் இவைகளைப் பார்வையிடலாம்.

மீண்டும் பெறத்தக்க வைப்புப் பணம் 5 ரூபாவைச் செலுத்துபவர்களுக்கு கொழும்புத் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள கணக்காளரால் கேள்விப் படிவங்கள் 27.02.73 ந் திகதி முற்பகல் 10 மணிவரையும் வழங்கப்படும்.,

கொழும்பு 7, அல்பேட் கிறசென்ற், எண் 16/7 இலுள்ள தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்கள அலுவலகத்திலிருந்து இக் கேள்விகள் சம்பந்தமான மேற்கொண்ட சகல விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

எல். பி. ராஜகருணா,
தொகைமதிப்புப் புள்ளிவிபர அதிபர்.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்,
த. பெ. 563,
கொழும்பு 7, 1973 டிசம்பர் 30.

1-852—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### உணவுப் பகுதி

பாவனைக்குகந்ததல்லாத சணற் சாக்குகள், சாக்குப் பைகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள்

சாமேஸ் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 100158 சணற்சாக்குகள், சாக்குப்பைகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கைகள் 1973 பெப்ரவரி 13 செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணிவரை 330, யூனியன் பிளேஸ், கொழும்பிலுள்ள உணவுக் காரியாலயத்தின் கோரிக்கைச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கோரிக்கைகள் ரூபா 500 கட்டி இவ்வலுவலகத்திலிருந்து பெறும் பத்திரத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். இக்கோரிக்கைகள் பற்றிய மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இ. காத்தாமுத்து,
உணவு அதிகாரிக்காக.

330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2,
1973.01.15.

1-948—26.1.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### மதுவரித் திணைக்களம்

சீதுவ, பண்டாரவத்தையிலுள்ள அரசினர் சாராயவடிசாலைக்கு 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 1 ம் திகதியிலிருந்து 1973 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி வரைக்கும் கள் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள்

1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1973 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30 ம் திகதி வரைக்கும் சீதுவ, பண்டாரவத்தையிலுள்ள அரசினர் சாராயவடிசாலைக்கு கள் வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள், கொழும்பு 1, செயலகம், நிதியமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத்தலைவரால், 1973 ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ம் திகதி முற்பகல் 10.00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

மதுவரி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். அவர்களிடமிருந்து சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

எச். பி. விஜேகோன்,
மதுவரி ஆணையாளர்.

மதுவரி ஆணையாளர் அலுவலகம்,
கேமாஸ் கட்டடம்,
கொழும்பு 1, 1973.01.13.

1-871—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

மெருகிடு வர்ணம் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

கீழ்வரும் வர்ணங்களை வழங்குதற்கான கேள்விப்பத்திரங்களை 1973.2.15 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

**தனிக்குறிப்பீடு**

வெளி, உள் பாவனைக்குகந்ததும், விரைவில் உலரக்கூடியதும், மரஅமைப்புகளான கதவுகள், சாளரங்கள் (யன்னல்), பலகைகள் முதலியவற்றிற்குப் பூசக்கூடியதுமான வர்ணங்கள்.

பிளேக் கிறே—பிரிட்டிஷ் ஸ்ரான்டேட் 9—094

சாம்பல் கிறே—பிரிட்டிஷ் ஸ்ரான்டேட் 9—096

**அளவுகள்**

பிளேக் கிறே—125 கலன்கள்
சாம்பல் கிறே—100 கலன்கள்
வெள்ளை—10 கலன்கள்

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம் :

(அ) முன்னைய இருப்பும்

(ஆ) கிருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோக காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50.00 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ஆம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1973.02.14 ஆந் திகதி நண்பகல் 12 மணி வரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப்பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "வர்ணம் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ. அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்டவேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973.02.15 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களம், கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

சிரி/2/449
காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1, 1973.1.13.

1-925—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### கடற்றொழில் திணைக்களம்

பயனுறுத்தப்பட்ட இயந்திர வள்ளங்களினதும் கடலக டீசல் வெளியிணை மோட்டார்களினதும், மீன்பிடி கருவிகளினதும் ஏல விற்பனை.

கீழே நிரலில் வழங்கப்பட்ட தேதிகளிலும், இடங்களிலும் பயனுறுத்தப்பட்ட இயந்திர வள்ளங்களும், கடலக டீசல் என்ஜின்களும், வெளியிணை மோட்டார்களும், மீன்பிடிக் கருவிகளும் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

2. நிரலில் குறிக்கப்பட்ட இடங்களில் இயந்திர வள்ளங்களையும் என்ஜின்களையும் மீன்பிடிக் கருவிகளையும் பார்வையிடலாம்.

3. கொடுப்பனவுகள் பணமாகப் பின்வரும் முறைப்படி செலுத்தப்பட வேண்டும் :—

(அ) விற்பனை முடிந்த உடனடியாக வள்ளம்/என்ஜின் விற்கப்பட்ட விலையில் $\frac{1}{4}$ பங்கு ;

(ஆ) விற்கப்பட்ட விலையில் $\frac{3}{4}$ மூன்று நாட்களுள் செலுத்தப்படல் வேண்டும் ;

(இ) எந்த ஒரு வள்ளத்தை/என்ஜினைக் குறித்து விலை கேட்டல் தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி உரிமை அல்லது தள்ளுபடியாக்கல், விற்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்கள்வரை ஒதுக்கி வைக்கப்படும். இந்த வகையில் வள்ளத்தின்/என்ஜினின் விற்பனை விலையில் $\frac{1}{4}$ பங்கை வைப்புப் பணமாகவும், விற்பனை முடிந்தவுடனேயே பணமாகச் செலுத்த வேண்டும். விலை கேட்டல் ஏற்கப்படுமாயின், விற்பனை விலையின் மீதி $\frac{3}{4}$ பங்கும், இறுதியாக ஏற்றுக் கொள்ளல் அறிவித்தலுக்கு 3 நாட்களுக்கு முன்னராகச் செலுத்தப் படவேண்டும். இப்படிச் செய்யத் தவறின், வைப்புப் பணம் இழத்தலில் முடியும். விலை கேட்டலைத் தள்ளுபடி செய்யின் வைப்புப் பணம் மீள்ளிக்கப்படும்.

4. வெளியிணை மோட்டார்கள் சம்பந்தமாக ஏலத்தில் வாங்குவோர் தொகையில் $\frac{1}{4}$ பங்கை உடனடியாகவும் மிகுதியை மறுநாள் பிற்பகல் 12 மணிக்கு முன்னரும் செலுத்துமாறு வேண்டப்படுவர்.

5. ஏலத்தில் விற்ற வள்ளம்/என்ஜின்/மீன்பிடிக் கருவிகளுக்குரிய பணத்தைச் செலுத்தி அப்புறப்படுத்தும் வரை, இவ்விடத்தில் அதன் பாதுகாப்பு விற்பனையில் வாங்கியவரையே சாரும்.

அட்டவணை

**மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, யாழ்ப்பாணம்**

| வள்ள எண் | என்ஜின் இனம் | ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|
| கொட்டு | | | | |
| எஸ்ஜசீ–130 | ரோர்பிடோ (அடிப்பாகம் மட்டும்) | காரைநகர் | 1973–02–24 | காலை 10.00 |
| என்எல்–51 | ரோாபிடோ | பவர்கிருப்ட் வள்ளச்சாலை, யாழ்ப்பாணம் | | |
| எஸ்ஜசீ 84 | ரோர்பிடோ | ஷை | 1973–02–26 | காலை 10.00 |
| எம்சீ 83 | — | | | |
| ரீ 136 | — | ஷை | | |
| எஸ் 270 | — | கான்கேசன்துறைக் கடற்கரை | 1973–02–20 | மாலை 2.00 |
| என்எல் 37 | — | பருத்தித்துறை | 1973–02–22 | காலை 9.00 |
| ரீஎஸ்–51 | — | கரைக்கோப்பு | 1973–02–22 | காலை 11.00 |
| எம்சீ–30 | — | வேலணை | 1973–02–23 | காலை 10.00 |
| என்ஜின்கள் | | | | |
| ரீஎஸ்–61 | பேர்க்கின்ஸ் (என்ஜினின் பாகங்கள்) | கடற்றொழில் அலுவலகம், பருத்தித்துறை | 1973–02–22 | மாலை 2.00 |
| வெளியிணை மோட்டார்கள் | | | | |
| வெளியிணை மோட்டாரின் இலக்கமும் இனமும் | | | | |
| 2333 | மக்கிலட் ஸ்கொட் | கடற்றொழில் அலுவலகம், தாளையடி | 1973–02–19 | காலை 10.30 |
| 1634194 | மேர்க்குறி | கடற்றொழில் அலுவலகம், காங்கேசன்துறை | 1973–02–20 | ஷை |

**மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, மன்னுர்**

| வள்ள எண் | என்ஜின் இனம் | ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|
| கொட்டு | | | | |
| எப்–23 | — | எருக்கலம்பிட்டி | 1973–02–26 | காலை 10.00 |

**மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, முல்லைத்தீவு**

| வள்ள எண் | என்ஜின் இனம் | ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|
| என்ஜின்கள் | | | | |
| எஸ்ஜசீ–102 | ரோர்பிடோ | மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் முல்லைத்தீவு. | 1973–03–01 | காலை 10.00 |

**மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, மட்டக்களப்பு**

| வள்ள எண் | என்ஜின் இனம் | ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|
| கொட்டு | | | | |
| சீ–322 | — | புன்னக்குடா | 1973–02–20 | காலை 10.30 |
| என்ஜின்கள் | | | | |
| எஸ்ஜசீ–101 | ரோர்பிடோ | கடற்றொழில் அலுவலகம், வாழைச்சேனை | 1973–02–21 | காலை 10.00 |
| மீன்டிக் கருவிகள் கருவிகளின் விபரம் | | | | |
| ஜீஓடீபி–6 | 4½″ நைலோன் வலைகள் 372 9 யார் | கடற்றொழில் அலுவலகம் மட்டக்களப்பு | 1973–02–22 | காலை 11.30 |
| | 5″ ஷை 45 9 ஷை | | | |
| | 4″ ஷை 63 9 ஷை | | | |
| | 3½″ ஷை 87 9 ஷை | | | |
| — | மர மிதப்புகள்–20 | | | |
| — | பாவிக்கமுடியாத கிழிந்த வலைத் துண்டுகள் | | | |
| வெளியிணை மோட்டார்கள் இலக்கமும் இனமும் | | | | |
| 2502530 | பென்ரா | பெரும்பகுதி கடற்றொழில் அலுவலகம், மட்டக்களப்பு | 1973–02–19 | காலை 10.00 |
| 2502547 | பென்ரா | | | |
| 1602448 | பென்ரா | | | |
| ரீஎச்சீ–80222 | எல்.சீ.கல். | | | |

**மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, திருகோணமலை**

| வள்ள எண் | என்ஜின் இனம் | ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|
| கொட்டு | | | | |
| எல்–19 | — | உள்–துறைமுகம், திருகோணமலை பெரும் பாக கடற்றொழில் அலுவலகத்துக்குக் கிட்ட | 1973–02–17 | காலை 10,00 |
| எஸ்ஜசீ–139 | ரோர்பிடோ | கங்கை | 1973–02–19 | ஷை |
| எம்ஜேடீ–30 | — | குளாவடி | 1973–02–20 | ஷை |
| என்ஜின்கள் | | | | |
| எஸ்–8 | புக் | பெரும்பகுதிக் கடற்றொழில் அலுவலகம், திருகோணமலை | 1973–02–17 | மாலை 2.00 |
| எல்–19 | புக் | ஷை ஷை | | |

**மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, கல்முனை**

| வள்ள எண் | என்ஜின் இனம் | ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|
| கொட்டு | | | | |
| எஸ்–92 | யன்மார் | ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை, அம்பாறை | 1973–02–19 | காலை 11.00 |

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகப் பகுதி, புத்தளம்

| வள்ள எண் கொட்டு | | என்ஜின் இனம் | | ஏலத்தின் விற்கப்படும் பொருட்கள் இருக்குமிடம் | | ஏலத்தின் தேதி | நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| ரீ–152 | .. | — | .. | இறங்கு துறைமுக வீதி, சிலாபம் | } | 1973–02–14 .. | காலை 10.00 |
| ரீ–433 | .. | பேர்கின்ஸ் (பாகங்கள் மட்டும்) | .. | டிை டிை | | | |
| எஸ்ஜசீ–103 | .. | — | .. | நடுப்பாடு கடற்கரை, சிலாபம் | .. | 1973–02–15 .. | டிை |
| டபிள்யூஎஸ்–50 | .. | — | .. | இரணவிள ஆற்றங்கரை | .. | 1973–02–17 .. | டிை |
| என்ஜின்கள் | | | | | | | |
| ரீ–253 | .. | பார்சன்ஸ் .. | .. | கடற்றொழில் அலுவலகம், சிலாபம் | } | 1973–02–14 .. | காலை 11.00 |
| எஸ்ஜசீ–142 | .. | ரோார்பிடோ .. | .. | டிை டிை | | | |
| டபிள்யூஎஸ்–50 | .. | பேர்க்கின்ஸ் .. | .. | நீர்ற ஸ்ரோஸ், தோடுவாவை | .. | டிை .. | மாலை 2.00 |
| வெளியிணை மோட்டார்கள் இனமும் இலக்கமும் | | | | | | | |
| 2080211 | .. | மேர்க்குறி | .. | கடற்றொழில் அலுவலகம், கட்டுனேரியா | .. | 1973–02–28 .. | காலை 10.30 |
| 2080280 | .. | டிை | .. | டிை சிலாபம் | .. | 1973–02–23 .. | டிை |
| 1698055 | .. | டிை | .. | டிை கல்பிட்டி | .. | 1973–02–27 .. | டிை |

ஏ. ஐ. முகைதீன,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்,
கொழும்பு 3,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந் உ.

1–872—26.01.73 ந் திகதி வர்த்தமானி இல. 44

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேர போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொளளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** | 5. 1.73 | வெள்ளி | 27.12.72 | புதன் | ந.ப. 12.00 |
| | 12. 1.73 | வெள்ளி | 3. 1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19. 1.73 | வெள்ளி | 10. 1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26. 1.73 | வெள்ளி | 17. 1.73 | புதன் | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** | 2. 2.73 | வெள்ளி | 24. 1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9. 2.73 | வெள்ளி | 31. 1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 15. 2.73 | வியாழன் | 7. 2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23. 2.73 | வெள்ளி | 14. 2.73 | புதன் | ந.ப. 12.00 |
| **மாச்சு** | 2. 3.73 | வெள்ளி | 21. 2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9. 3.73 | வெள்ளி | 28. 2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16. 3.73 | வெள்ளி | 7. 3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23. 3.73 | வெள்ளி | 14. 3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30. 3.73 | வெள்ளி | 21. 3.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஏப்பிறல்** | 6. 4.73 | வெள்ளி | 28. 3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11. 4.73 | புதன் | 4. 4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19. 4.73 | வியாழன் | 11. 4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27. 4.73 | வெள்ளி | 18. 4.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆடு ஓகத்து மீ 18 உ.*

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.